479

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஆதிபருவமென்னும்
சபாபருவத்தில் செய்யுளாகயிருந்த
விஷ்ணுவின் செவியினிடமாக பிறந்த

மதுகயிடாசூர
சம்மார நாடகம்.

இஃது,
வில்லியனூர் பேட்டைக்கடுத்த
கணுவாபேட்டையில் இருக்கும்
கு. நாராயணசாமிபிள்ளை குமாரர்
முனுசாமி பிள்ளை பாடியதை

சாத்தாங்குப்பம்,
சபாபதி வாத்தியார் குமாரர்
வாதவாத்தியார் பிழைதிருத்தம் செய்ததை

காலஞ்சென்ற,
சூளை-முனிசாமி முதலியார் பாரியாள்
அம்மணி அம்மாள்
சகல சுதந்தரமும் பெற்றுக்கொண்டு

சென்னை,
ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1926.

அணா 5

29 JUL 1926
O-,2MM04,M
N26.
149845

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஆதிபருவமென்னும்

சபாபருவத்தில் செய்யுளாகயிருந்த

விஷ்ணுவின் செவியினிடமாகபிறந்த

மதுகயிடாசூர

சம்மார நாடகம்.

இஃது,

வில்லியனூர் பேட்டைக்கடுத்த

கணுவாபேட்டையில் இருக்கும்

கு. நாராயணசாமிபிள்ளை குமாரர்

முனுசாமி பிள்ளை பாடியதை

சாத்தாங்குப்பம்,

சபாபதி வாத்தியார் குமாரர்

வாதவாத்தியார் பிழைதிருத்தம் செய்ததை

காலஞ்சென்ற

சூளை-முனுசாமிமுதலியார் பாரியாள்

அம்மணி அம்மாள்

சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது

ரிஜிஸ்டர்ட் காபிரைட்

இதன் விலை] 1926. [அணா 5

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்றயாவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

ம-ா-ா-ஸ்ரீ, வில்லியனூர் பேட்டைக்கடுத்த கனுவாபேட்டையில் இருக்கும். கு. நாராயணசாமிபிள்ளைகுமாரர் முனுசாமிபிள்ளை அவர்களால் நூதனமாய் இயற்றிய மதுகயிடாசுரசம்மார நாடகத்தை சென்னை சூளை, சாமிபிள்ளை தெருவு, 54-நெம்பர் வீட்டில் புத்தகவியாபாரம், காலஞ்சென்ற சூளை-முனுசாமிமுதலியார் பாரியாள் அம்மணியம்மாள் நான் மேற்படியாரிடம் சுத்தக்கிரயத்திற்குப் பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டுவெளிப்படுத்தி யிருப்பதால், ஷை நாடகத்தை யாதாமொருவர் அச்சிடுவரேல் 1925ஸ்ரீ வருஷத்து 25 - வது ஆக்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின் விதிப்படி யான் கோறும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட்டு செக்ஷன் குற்றத்திற்கும், வுத்திரவாதிகளாக வேண்டுமென்பதை கவனிக்கக் கோறுகிறேன்.

இப்படிக்கு,

சூளை. அம்மணியம்மாள்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஆதிபருவமென்னும்

சபாபருவத்தில் செய்யுளாகயிருந்த

விஷ்ணுவின்சேவியினிடமாபிறந்த

மதுகயிடாசூர சம்மார நாடகம்.

விநாயகர் துதி விருத்தம்.

முந்திவொரு முகமாகி இரண்டு கொம்பாய்
மூன்றுகண்ணும் நால்வாயாய் முகத்தில் கையொன்
றைந்துகரமாகி மத மாருமாகி
அரியசத்தி ஏழுக்கும் ஆதியாகி
புந்திதிரு மேனிதிசை எட்டுமாகி
ஒன்பது சக்கரமுடையான் உயர்ப்புமாகி
தொந்தி வயராகி யெங்கள் குருவுமாகி
சொர்ப்பெருகும் பரஞ்சுடரை தொழுதுசொல்வாம்.

மதுகயிடா சூரன் வருகிற கவி.

அண்டமெனும் ஆயிரத்தெட் டண்ட மெச்ச
அவனியெல்லாம் கிடுகிடென அமரர்கொஞ்ச
கண்டமெலாம் தான் குடுத்து அரக்கர்சேனை
கரியதுபோல் கெற்சித்து கமரிபாய்ந்து
தண்டமுடன் சிலைவாளி பாலாயீட்டி
தடியுடனே தோமரமும் கிந்தவாள்யேந்தி
சண்டனுமே மயங்கிடவே மதுசூரதீரன்
சதிருடனே கொலுநாடி வருகின்றானே.

மதுசூரன் தரு.

வந்தேனேமதுவென்னும்சூரன் அந்தமாயவன்
செவியினிடமாகவந்த தீரன்
சந்திரரும்சூரியரும்வாட நல்ல
தவண்டமல்லையுமே பேரிகைபோட
மந்திரகிரி மலைதனையே எடுப்பேன்—என்னை
வந்தெதிர்த்தவீரரைநான் ஜெயம்கொடுப்பேன்
விந்தையுடன்பரம னெதிர்த்தாலுமவனை
கொந்தியேகுலைகளது செய்திடுவேன்மேலும்
அந்தமுள்ளமாய னெதிர்த்தாலும்ஆகா
அஞ்சிநான்ஒளிப்பதுண்டோ புவியினில்மேலும்
அயனெனும்பிர்மனையும்வாட்டி அப்போ
நயமுள்ளநம்கொடியை அவனுலகில்காட்டி
பயங்கொண்டுதேவருமேவோட இந்தபாரினில் (வந்)

மதுசூரன் கவி.

அந்திவண்ணன் முக்கண்ணன் அரனருள் பாதம்போற்றி
கந்தன்தன் தானளித்த கரியுரி நாதாபோற்றி
வந்திட பார்வதிக்கு வாமமா பாகந்தந்த
செந்திரு வதனுயெந்தன் செகதீச நாதாபோற்றி.

வசனம்

அரகரா முக்கண்ணு உமா பார்வதிக்கு வாமபாகந்தந்தருளிய உமாபரமேஸ்வரனே உமது பாதார விந்தத்திற்கு, அடியேன் வந்தனம் சபாஷ்.

மதுசூரன் கவி.

மந்திரிமாரே கேளீர் மானிலமெலாந் தழைக்க
அந்திவண்ணன்தன்னருளால்அருமையாய் கொலுவில்வந்தோம்
எந்தனின் வுடன்பிரந்த இளையவன் கயிடன்தன்னை
விந்தைநாம் அழைத்தோமென்று விரைவினில் கொண்டுவாரீர்.

கயிடாசூரன் கவி.

திரமது வலுமைவுள்ள தீரனும் மதுசூரன்தான்
அருமையாய் அழைத்தசேதி அன்புடன் காதில்கேட்டு
பெருமையா காணவென்று பெரியதோர் சிங்கம்போல
கருமலைபோ லெழுந்து கயிடவன் வருகின்றானே.

மதுகயிடாசூரன் தரு.

வந்தான்பாரீர்கயிடாசூரன் வாரான்பாரீர்
வந்தானிதோயிந்த வானுலோகமஞ்ச
அந்தமுள்ளஅண்ணன் அகமகிழ்ந்துகொஞ்ச (வந்)

தீராதிதீரன்வுலகோர்மெச்சும் வீராதிவீரன்
கோரமென்னும்மந்த கொடியசிங்கம்போல
மாரனென்னும்வந்த வடிவுமதிகமேலே (வந்)

முத்துகள்மின்னமார்பிலணிந்த மோகனம்துன்ன
சத்தவெண்டயங்காலில் சதங்கைகலகலென்ன
இத்தலமன்னரும் யெவரும்கண்டுபென்ன (வந்)

அண்ணனுமழைக்கசேதி தன்னையாவரும்பிழைக்க
மண்ணில்யாவருங்கண்டு மலரடிசேவிக்க
யெண்ணமதுதன்னை ஏனென்றுதரவிக்க (வந்)

கயிடாசூரன் கவி.

ஆனைதன் யுரிதரித்த அரணருள் பாகாபோற்றி
மானதை கரம்பிடித்த மகாதேவா பாதம்போற்றி
வானமும் புவியிலுள்ள வந்திட்ட தேவருக்கு
கோனேநீ யிடரைத்தீர்த்த குரவள்ளி துதித்திட்டேனே.

கயிடாசூரன் தரு.

சருணம்புரிந்தேனண்ணு உமதுபாதம்
கருணை தருவீர் நண்ணு
அருணகிறணவடி அழகானயென்தமையா
மருமமில்லாமலுந்தன் மலரடிசேவித்தேன் (சரு)

தேவதேவர்கள்போற்றிடும் உடன்பிரந்த
மேவிவந்தனம் ஏற்றிடும்
ஆவலுடன்பணிந்தேன் அடியேன்கரம்குவித்து
தாவியெந்தனையிப்போ மேவியழைத்தசேதி(சரு)

கயிடாசூரன் கவி.

தேவதேவர்கள் போற்றும் திருவழகுடைய அண்ணு
ஆவலாய் உந்தன்பாதம் அடியிணை பணிந்துநின்றேன்
காவலார் நெரிங்கிசூழ கடிகியே அழைத்த
நாவலரிய யென்முன் நலமுடன் நுரைசெய்வாயே.

கயிடாசூரன் கவி.

வந்தடி பணிந்துநின்ற மன்னவா தம்பிவாழி
வுந்தனை யழைத்தசேதி வுரைப்பேனுன் கேளுமப்பா
இந்தஓர் வுலகந்தன்னில் யெவர்யெதிர்ப் பார்கள்நம்மை
எந்தனுக் கரியநன்று எடுத்துரை செய்குவாயே.

கயிடாசூரன் தரு.

ஆகாயிந்தவுலகில் ஆர்யெதிர்ப்பார்கள்நம்மை
அரிந்துரை என் தீரம் எந்தனண்ணு
ஏகபோகமாக இருவரும் எதிர்த்தாலே
யினி நமக்கெதிருண்டோ வருவார்புவிமேலே (ஆ)

கயிடாசூரன் தரு.

உந்தனிடவீரமும் உலகினிலெவர்க்குண்டு
உளமதுமகிழ்ந்தேனே எந்தன் தம்பி
இந்திரதேவர்கள் எதிர்த்திட்டாலும்நம்மை
இனிசும்மாவிடலாமோ எடுப்பார்வோட்டம் தம்பி (உ)

கயிடாசூரன் தரு.

வாரும்வாருமண்ணு தீரமும்கண்டீரோ
வார்த்தையுரைத்ததினல் செகமதுவிண்டீரோ
ஆர்வந்து எதிர்த்தாலும் அவரைவிடப்போகுமோ
தாரும்வாடை எனக்கு சவுரியங்கொடுவோமோ (வா)

கயிடாசூரன் தரு.

அப்படியானாலும் மிந்த அவனியைசுற்றியே
இப்பொழுதே வருவோம் இருவரும் நத்தியே
தப்பிதமில்லாமல் தனிரதம்மேருவோம்
செப்பியே முடித்தி — சேருவோம் கூருவோம்

மதுகயிடாசூரன் கவி.

இருவரும் புரப்பட்டாக்கால் எதிர்ப்பாரெவருமில்லை
திருவருள் புரியுமண்ணு தேவரீர் சித்தம்போல
ஒருமையாய் வொத்துநாம் உலகினில் சுற்றிவர
சரியென்று சந்தோஷித்தேன் தம்பியென்கூடவாராய்.

மதுகயிடாசூரன் தரு.

திக்குவிஜயங்கள்செய்ய சீர்பணியலங்கரித்து
உக்கிரவீரதீரர்சூழவே மதுகயிடாசூரன்
உலகமெங்கும் தன்னை சுற்றவே
ஆனைசேனைசூழ ஞணுவம்நெரிங்கிதாழ
யேளுமிரண்டோடவே மதுகயிடாசூரன்
இந்தபூலோகம் தன்னைநாடியே
கத்திகட்டாரியீட்டி கைதனில்மழுவாள்வாட்டி
யெத்திசை நடுங்கவாராரே மதுகயிடாசூரன்
யிருவருமே கூடிவாராரே
கொச்சலமச்சல தேசம் அச்சமில்லாசோளதேசம்
இச்சமயம் தேடிவாராரே இருவருக்கும்
யெவரும் காணுமல் நொந்துநின்றூரே

மதுசூரன் கவி.

தம்பியு நானுமாக தராதல மெல்லாஞ்சுத்தி
இன்பமாய் வந்துசேர்ந்தோம் இயலான மந்திரிமாரே
அம்புவி தனில்நமக்கு ஆர்தானே எதிரியென்று
துப்புரப் பார்க்கவேண்டும் தூதரை அழைத்திடாயே.

தூதர் கவி.

திக்குதிசை மன்னரெல்லாம் நடுங்கும்தீரன்
தீவிரமாய் மதுசூரன் அழைத்தசேதி
அக்கரையாய் நாமறிய வேண்டுமென்று
அதிவேகமா யெழுந்து தூதர்கூடி
உக்ரமுடன் பட்டாடை பளபளென்ன
ஓசையது கெர்ச்சித்துப் போலெழுந்து
பக்குவமாய் வேகிம்னேவேகிகூட
பரந்துசூரன் முன்வருக வெளிப்பட்டாரே

தூதர் தரு.

யெட்டிபாய்குவார் தூதர்கள் எகரிவீழ்குவார்
கட்டிவரச்சொன்னல்காரியத்தை வெட்டிவருகுவார்
அஷ்டகெஜங்களை தூதர்கள் அடியோடெடுப்பாராம்
கெட்டிகெட்டியாபாராங்கல்லை கெஜத்தாலளப்பாராம்
ஆழிநீர்தனை தூதரும் ஆவென்றறிகுவாராம்
சூழுலகினில்மன்னர்களை சூழ்ந்துகொள்வாராம்
மண்டலம்போற்றும்மதுசூரன் மகிழ்ந்துஅழைத்திட
அண்டியதூதர்கள்யாவரும் அடிபணிந்தாரே

தூதர் தரு.

சருணம்புரிந்தேனையயனே உமதுபாதம்கருணைபுரிந்தேனையயனே
தருணமதுநல்ல தர்க்காக்கவேணுமல்ல
அருணனுதையம்போல் அழைத்ததைசொல்லுமையனே
அண்டத்தைமுட்டிதூக்கவோ அழைத்தீரிப்போஅலைகடல்நீரை
[தாக்கவோ
உண்டோவுண்டோவுலகை உருட்டிதிரட்டிடீரோ
தண்டனைஎதுவோநீரும் சாற்றியரியபாரும்(சரு)

தூதர் கவி.

வல்லமை தீரம்பெற்ற மதுசூர தீராபோற்றி
அல்லலை யகற்றும்தீரா அரசனே போற்றிபோற்றி
நல்லநீர் கொண்டாப்போலே ஞாயத்தை எங்களுக்கு
சொல்லிட வேணுமண்ணு தூதரு மறியத்தானே.

மதுகயிடாசூரன் தரு.

வாருங்கள்வல்லமைதூதரேநீங்கள் வசனந்தன்னைகேளும்தூதரே
வர்ருங்கள்புசபல வாகுள்ளதூதரே
பாருங்கள்கூருங்கள் தேருங்கள்தீருங்கள் (வாரு)

உலகினில்கெடிபெற்றோமோ இந்தஉண்மைவசனந்தன்னைகற்றோமே
தலம்புகழுலகெங்கும் தருதலமறியவே
வலுவுடனரிந்துமே வாருங்கள்சேருங்கள் (வாரு)

மதுகயிடாசூரன் கவி.

தீரமும் புகழும்பெற்ற திடமுள்ள தூதரேகேள்
சூரமா வந்தநீங்கள் சுகமதா வாழிவாழி
காரிழை போலயேகி கடிமையா வுலகஞ்சுற்றி
பாரினிலெதிரிருந்தால் பார்த்தெனக் குரைசெய்வீரே.

தூதர் தரு.

கேட்டுவெகுண்டு எழுந்தார்தூதர்கள்
கிளம்பியேசிங்க குட்டிபோலேகுதித்து
வாட்டங்கள்மிகவே கொண்டார்தூதர்கள்
வசியுரைத்தாப்போலே பல்லைக்கடித்தார்
ஆச்சுதென்று மீசை முருக்கியேயணிவரும்
ஆரண்யம்போகவே தான்குதித்து

மண்டலமும்நடுங்கிடவே தூதர்களும்
வாகானபகிரண்டம் நடுங்கிடவே
சத்தலோகம்தான்கடந்தார் கர்ணுதி
சந்திரசூரியர்காணுயிடமு தான்திரிந்தார்
வாருதியுதனைதாண்டி வடமதுரை
வந்தாரேமாயன்தன் புலமரிந்தார் (கே)

தூதர் கவி.

ஆகாயவானம்மட்டும் அனலிலா தேடிபார்க்க
வாகான யுந்தன்சொல்லால் வண்மையாய் புலமரிந்தோம்
போகாத யிடமுமில்லை புரந்தரன் மாயகிஷ்டன்
ஏகாத்திய மாயிருக்க இதுசிச மாகுந்தானே.

மதுகயிடாசூரன் கவி.

அப்படி யாகட்டு மென்று அனல்விழி பொரிபறக்க
சொர்ப்படி சூரன்தானும் சுருக்குடனெழுந்துசீரி
நர்ப்படி மாயன்தன்னை நாட்டியே தனுவெடுத்து
இப்பவே கொல்வே னென்று ஏகினன் சூரன்தானே.

பரமசிவம் கவி

தில்லையில் காளியோடு திருநட மிட்டபாதன்
பல்லுயி ரண்டமெல்லாம் படைத்திட்ட ஆதிதேவன்
நல்லுரை பார்வதிக்கு நால்வேதம் தந்தபோதன்
அல்லலை யகற்றும் யீசன் அரன்கொலு வருகின்றாரே.

ஷியார் தரு.

பொங்கரவணிந்தயோகனும் கெங்கைசடையிலங்க
தங்கிடாதிட மங்கைபாகனும்
பங்கமாகவேரிஷிகள்பத்தினி பாரினில்தபம்கெடவேவந்தவர்

ஆலகாலவிஷத்தையுண்டவர் எதிர்வந்தமுயலவனை
அன்பாமிதித்து அடியில்கொண்டவர்
மாலினிக்கிவர்மானுய்வந்தவர் காலில்தனையிடர்காளிக்கு
[செய்தவர்
கலைமகள்தன்கணவர்க்காகவே நல்லகாந்தியுருவமா(பொ)

தலைமிசை தெரியாமல்யேகவே
பலபலசித்துகள்கற்றசலந்திரன் நிலமத்துமண்டிட
[செய்ததுரந்தரன்(பொ)

மண்ணை மாணிக்கசற்காக எடுத்தவர்மிகதனை துதித்திட
பண்ணிக்குட்டிக்கும் பால்கொடுத்தவர்
கண்ணனுக்காழிதன்னைகொடுத்தவர் பின்னுமானையும்கரம்
[பிடித்தவர்(பொ)

பரமசிவன் கவி.

அருகினி லிருக்குமெந்தன் அன்புள்ள கணங்களேகேள்
விறவினில் மாளிசென்று விணடிகை தனிலே நீயும்
மருவிய யெனதுதேவி மங்கைபார் வதியாள்தன்னை
சரசரென் றேகிநீயும் தையலை யழைத்துவாராய்.

பார்வதி கவி.

சங்கரர் தானழைக்க தையல்பார் வதியும்கேட்டு
மங்களத் துடனெழுந்து மணிபணி யலங்கரித்து
தங்கியே தாதிமார்கள் தயவுடன் கவரிவீச
அங்கமு மகிழ்ச்சியாகி அம்மனும் வருகின்றுளே.

பார்வதி தரு.

சந்திரவதனமுள்ள சுந்திரமுகமிலங்க
வந்தவள்கருள்தருகும் மயேஸ்வரிவந்தாள் (சந்)

நாரணன்தனக்குதங்கை காரணனிடத்தில்மங்கை
பாரெங்கும்புகழ்படைத்த பார்வதிவந்தாள் (சந்)

பாதத்திலணிசதங்கை வேதத்தைகண்டொளிக்க
மாதவர்மகிழும்தேவி மயேஸ்வரிவந்தாள் (சந்)
தகதகென்றுடைமின்ன தண்டையும்கொலுசுதுன்ன
செகமுற்றும் புகழ்படைத்த தேவியும்வந்தாள் (சந்)
வல்லிநல்லிடையுடையாள் சொல்லினிற்குபாலழகாள்
அல்லலேயகற்றும்திவ்விய அம்மனும்வாராள் (சந்)
நாட்கற்கும்பாட்டகற்கும் பேட்டைமுனிசாமிக்கும்
கேட்டவரம்தானளிக்கும் கெவுரியும்வாராள் (சந்)

பார்வதி தரு.

சருணம்செய்தேன்நாதனே கருணைவையும்போதனே
வருணவடிவமுள்ளவுந்தன் தருணமுந்தன்பாதமே (சரு)

பரமசிவம் தரு.

பாதம்பணிந்தநங்கையே நிதமுவாழ்வாய்மங்கையே
நிதமுமெந்தனருகிருப்பாய் நீலியேநீயிங்கையே (பா)

பார்வதி தரு.

வேதம்போற்றும்பாதனே நீதமுள்ளபோதனே
ஆதரவாயென்னைகாரும் அயனும்காணுவேதனே (வே)

பரமசிவம் தரு.

அன்பருக்குகண்மணி இன்பந்தந்தேன்பெண்மணி
துன்பமாயினிநமக்கு சொல்லுவாய்விண்ணோர்மணி (அன்)

பார்வதி கவி.

உலகினில் புகழ்படைத்த உத்தம பிராணநாதா
கலக்கமு வந்ததென்ன கன்னியா ளெனேயிப்போது
அவர்முகம் வாடிடாமல் அழைத்தநற் சேதிதன்னை
நலம்பெற யின்னதென்று நங்கைமுன் னுரைத்திடீரே.

பரமசிவம் கவி.

நத்தியென் னடிபணிந்த நாயகி கேளாய்நீதான்
பத்தியா நீயென்றைக்கும் பாவையே வாழிவாழி
இத்தரை மீதிருந்து யாவற்கும் முத்திதந்து
உத்தமியாளேநாமும் உண்மையாய் வீற்றிருப்போம்.

நாரதர் கவி.

நிரையவெண்ணீறுபூசி நெற்றியிற் கோபியிட்டு
வரைபாலா பரமன்பாதம் வந்தித்து வெகுவாய்போற்றி
கரைபுரள் காளிபோற்றி கயிலையை நாடிதேடி
நரைதிரை நீக்கவல்லோன் நாரதர் வருகின்றாரே.

நாரதர் தரு.

நாரதமாமுனிதானிதோவந்தார் இந்தபேருலகத்தினில்புகழ்மிகதந்தார்
தராதலத்தில்யாரும் தயங்கிமயங்கிட
நேருள்ளஞானிகள் நின்றுதயங்கிட (நா)

திருலோகவொருநொடியால் சுற்றிடும்தீரன்
திருமாலவற்குமே நானொருபேரன்
வரம்பெற்றதாருகன் வண்டனை கொன்றிட
திரமுடன்கந்தற்கு சேதியும்சொன்னவர் (நா)

மயியுருமாலைசோபிதங்கொண்டுகோபியணிந்தேரும்செய்திடதொண்டு
நாபிற்கலைவிணி வைத்தவனன்று
நாயத்தினால்வந்த நேயத்தைக்கண்டு (நா)

இன்றுகளகங்கள்யேதேதுமில்லை யீசன்மகனுக்குசெய்திடு
[வேன்தொல்லை
நன்றுஆனைமுகவன் நாயகன்வல்லை
கண்டுவிவரத்தை கவரும்நல்ல (நா)

நாரதர் கவி.

ஆதியாய் வொன்றாய்னின்று அகிலத்தில் பொதுவாய்வந்து
சோதியாய் சுடராதிப சுடரொளி விளக்காய்ஞான
நீதியா யாருக்கும் வேண்டி நின்வரம் தருகும்யீசா
பாதியா தேவிபாகா பரமனே போற்றிபோற்றி.

பரமசிவம் தரு.

எந்தனைபணிந்தநாரதா என்றும்நீவாழி
வந்ததென்னநீசீரதா
அந்தமுள்ளவுலகினில் யதிசயங்கள்
எந்தனுக்கரிந்திட எடுத்துரைத்திடுவாய் (எந்த)

நாரதன் தரு.

அண்டர்துதிக்கும்பரதனே அன்பர்கள்போற்றும்
கெண்டதடங்கும்பரதனே

மண்டலந்தனையேற்றும் மயேஸ்வரதேவனே (அ)
கண்ட யதிசயங்கள் ஒன்றுமில்லைபோதனே

பார்வதி தரு.

வந்துநாரதாவாழ்குவா நீயுமேயுந்தன்
சிந்தைமகிழதாழ்குவாய்
சந்தோஷமாகவந்த சங்கதியரியவே
இந்தசபையிலுள்ளோர் எவரும்மரியவே (வந்)

நாரதன் தரு.

எங்கும்புகழும்பூரண அரனிடத்தில்தங்கும்
உமையேகாரணி
சங்கையெனக்கிங்கேது தாயேயிருக்கும்போது
அங்கெங்கும்போய்பார்த்தேன் யாதுசேதிகளில்லை(எங்)

பரமசிவம் தரு.

இல்லையென்றுரைத்ததீரனே புவனமெல்லாம்
பரப்பவும் சந்தோஷமானனே
நல்லதுயுந்தன்சொல்லால் நங்கையுநானுமாக
உல்லாசமாயிருவர் உண்மைதனையரிந்தோம் (இல்லை)

நாரதன் கவி.

அண்டமெல்லாம் துதித்தொழுகுமய்யாவுந்தன்
அடியிணையை நான்துதித்து சொல்வேன்கேளும்
மண்டலமெலாந் துதிக்கும் அங்கரர்க்கு மணஞ்செய்யா
திருப்பதினல் நகைக்கின்றார்கள்
யெண்டிசையு மெச்சிடவோர் பெண்ணைப்பார்த்து
எழில்முகூர்த்தம் செய்திடவே சுகமுண்டாகும்.
தண்டருளும் மாலையது தரித்ததாயே
தனையருக்கு விவாகமது செய்திட்டீரே

பரமசிவம் தரு.

அந்தமுள்ளமாமயிலே மைந்தனுக்கு மணஞ்செய்ய
உந்தன்மனக்கருத்தென்ன ஓதுவாய்பெண்ணே.

பார்வதி தரு.

மைந்தனுக்குமணமுஞ் செய்ய மானிலத்தில்யார்தடுப்பார்
விந்தைமனமகிழ்ந்தேன் மெல்லியும் நானே

பரமசிவம் தரு.

மங்கையரேபார்வதியே எங்கப்பெண்கிடைக்குமடி
சங்கையரயெந்தனுக்கு சாற்றுவாய்பாதே(மங்)

பார்வதி தரு.

ஆலமுண்டநீலகண்ட ஆதிபரஞ்சோதியேநீர்
காலத்திலேபெண்கொடுப்பார் காணனேநாதா(ஆல)

பரமசிவம் தரு.

அருகிலிருக்கும்நாரதனே அரைநொடியிலுலகம்சுற்றி
வருபவனேபெண்ணிருந்தால் வாக்கினுல்சொல்லும் அரு)

நாரதன் தரு.

திங்களை தரித்தயீசா மங்கையுமையாளின்நேசா
நங்கையாளிருக்குமிடம் நானறியேனே(திங்)

பரமசிவம் கவி.

அவரவர்க்கு பெண்டுதனை உண்டு செய்ய
அயனிருக்க நான்தியங்கி அஞ்சலாமோ
கவரமா நமது மைந்தன் விநாயகர்க்கு
காரிழையை யெங்கேவுண்டு செய்தாரென்றால்
தவரில்லா பிர்மனுமே வுரைப்பான் பெண்ணே
சடுதியிலே நாம் சென்று சத்தியலோகம்
பவருடனே நாம்வருவோம் பயணமாகும்
பாவையரே நீகூடி வருகுவாயே.

நாரதன் கவி.

ஆகாகா யரனேவோர் சேதிகேளும்
அருவைக்கு நீதியங்கி அஞ்சவேண்டாம்
போகவே திருமாலின் பெண்ணிருக்கும்
புலஞ்சொல்ல யவராலே ஆகுமாகும்
ஓகோகோ யவளிருக்க உங்கட்கென்ன
ஒன்றுக்கும் அஞ்சாதே உடனேபோவோம்
பாகாக பாவையரை பார்த்துக்கொண்டு
பரமனே நாம்வருவோம் பயணமாவீர்.

பரமசிவன் தரு.

மாதரசேவருவாயண்ணன் மாயனிடத்தில்செல்லநீயே
ஓதியநாரதன் உரைத்தமொழிப்படிக்கி
வேதியர்சூழவே விடைமீதிலேறியே (மா)

பார்வதி தரு.

ஆலத்தையுண்டருளைய்யா யிப்போ சாலம்யினிமேலேதுய்யா
காளைமீதிலண்ணன் கண்ணனிடத்தில்சென்று
ஜாலமில்லாமல்பெண்ணை சடுதியில்பார்ப்போம்நன்று (ஆ)

பரமசிவன் தரு.

நாரதன்சொன்ன மொழிபோலேயினி
சாலமில்லாமல் புவிமேலே
சீரதாமாயவன் செயலதைகொண்டுமே
பாரோர்புகழ்ந்திட வருகலாம்கண்டுமே (நா)

பார்வதி தரு.

திங்களணிந்த எந்தன்நாதாயிந்த
நங்கைக்கிசைந்த தில்லைபோதா
மங்களமாய்நாரதன் மனம்போல்முடித்துவைக்க
சங்கையினிமேலே தங்கவேண்டாமேமிக்க

பரமசிவம் கவி.

அருகிருக்கும் நாதனே சொல்லக்கேளாய்
அரைநொடியில் மாயனிடம் சென்றுநீயும்
பெருமையுடன் உமதுதங்கை மைந்தனேடுஞ்
பெண்பார்க்க பரமசிவன் வாராரென்று
திருமாலின் மங்கையற்கு சேதிசொல்லி
சித்தமது யின்னதென்று அரிந்துசொல்லும்
மருமமில்லா நான்வந்து சேர்வேனங்கு
மண்டலமெல் லாமளந்தோ னிடத்தில்தானே.

கிருஷ்ணன் கவி.

அண்டமெல்லா மோரடியா யளந்தபாதன்
அரசனிட குமைதிலே வந்தநாதன்
கண்டனெனும் தன்னம்மான் கமுசனுலே
கனமுடனே யெதிர்குலத்தில் வளர்ந்தபோதன்

துண்டர்களை தமடக்க வந்ததீரன்
துணிவுகொண்ட சகடனையும் உதைத்தவேதன்
தண்டுளப மாலையது மார்பிலாட
தாணிபுகழ் கிருஷ்ணரிதோ வருகின்றாரே.

கிருஷ்ணன் தரு.

ரத்தினகெருடனேரி சத்தலோகமளந்தமாயன்
புத்தியில்மகிழ்ச்சியாகவே அரிகிருஷ்ணதேவர்
புகக்ஷியாகவந்து மேவினர் (ரத்)

பச்சைநிரமேனியிலங்க உச்சிதசங்குசக்கரம்துலங்க
லக்ஷமியாள்மார்பில்துன்னவே ஸ்ரீகிருஷ்ணதேவர்
நாகரீகமாகவந்து மேவினர் (ரத்)

முத்திழைத்த கலிக்கதுரா சத்ததண்டைகீதம்பாட
யெத்திசைமன்னரும்மெச்சவே அரிகிருஷ்ணதேவர்
ஏகபோகமாய்வந்து மேவினர் (ரத்)

பாததண்டைகீதம்பாட பஞ்சவர்னகிளிகள்கொஞ்ச
வேதநெரிவோதும்சீலனும் ஸ்ரீகிருஷ்ணதேவர்
விண்ணவர் மகிழவந்தாரே (ரத்)

பூசுரர்மறையோர்போற்ற பூமலர்யெங்கிலும்சாற்ற
தேசுநடைகள்கொஞ்சவே அரிகிருஷ்ணதேவர்
திருமூலரில் ஒருவர்வந்தாரே (ரத்)

அட்டியில்லாநற்பணிகள் கட்டியமேனிசொலிக்க
பட்டுருமாலைகள் துன்னவே ஸ்ரீகிருஷ்ணதேவர்
பாரளந்தோர் வந்துமேவினர் (ரத்)

கந்தார்த்தம்.

வசுதேவர் தேவகி வளர்ரே பல்லையில்
அசலில்லா யசோதையும் மனும்வளர்க்க
பசுவேலை தனிலே பாலமுது துண்ட
நசியாமல் கோபியற்கு

கிருஷ்ணன் தரு.

நானேராதாகிருஷ்ணனப்பா ஓரிமாதவா
தேனுள்தேவகிக்கு சிசுவாபிரந்தமர்ந்த
வானுள்பூதகிபாலே தானுயுண்டுமேகொன்றேன் (நா)

கிருஷ்ணன் கவி.

வந்தடி மகிழ்ந்துநின்ற மாதவா சொல்லக்கேளாய்
சிந்தனை வந்திடாமல் சேதினுன் வொன்றுரைப்பேன்
அந்தமா மனைக்குசென்று ஆசையென் தேவியான
நந்தனு மழைத்தானென்று நங்கையை யிட்டுவாராய்.

லக்ஷ்மி கவி.

சித்திர வர்னசேலே சேல்விழி யாளுடுத்தி
மெத்தவும் நடைநடந்து மேவியே பிறனு நாதா
உத்தம ரழைத்தாரென்று உண்மையை காண வேண்டி
பத்தியாய் லக்ஷ்மியாள்மீது பாவையும் வருகின்றுளே.

தரு.

ஆதிலக்ஷ்மிவந்தாள் அன்பருக்கெல்லாம்
மாதுவரங்களை தந்தாள்
கோதிலாமலர்கள்சூடி கோதையருடன்கூடி
நாதகீதங்கள்பாடி நாயகன் தன்னை தேடி

சுருள். நத்தியேவருபவர் குத்தமிமாது
முத்தியளித்திட மெத்தவும்தோது (ஆதி)

இடையில்பட்டிறல்சேலை இசைந்தபணிநல்மாலை
தடையில்லாமல்பின்னலே தையல்கா தில்பொன்னோலை
சுருள். தாதியர்சூழ்ந்திட நிதியதாகவே
வேதியரிருபுரம் காதலதாகவே (ஆதி)

அண்டர்க்கமுதளித்த ஆதிபாயனூர்மங்கை
என்டிசையோர்புகழும் ஈசன்தனக்குதங்கை
சுருள். இலகியபலமணி கலகலவென்ன
நலமிகுநவமணி பளபளவென்ன (ஆதி)

வேலைபழித்தவிழி போலவல்லிநல்மொழி
பாலோபல்லொளி காலிலணிநெல்நெளி
சுருள் காந்தியும் சாந்தமும் பூந்துளிர்மாது
மாந்தரைகார்த்திடவே யிவள்சாது (ஆதி)

லக்ஷ்மி தரு.

சருணசருணமையனே எந்தனையாளும் கருணைபுரிமய்யனே
தருணமீதிலுந்தன் தாளிணைபணிந்தேன்
அருணவடிவழகா அன்புக்குறியவரே (சரு)

கிருஷ்ணண் தரு.

சருணமென்று தாள்பணிந்த தையலன்னமே
சந்தோஷமாவாழ்ந்திருப்பாய் எந்தன்சொர்னமே
எந்தன்சொர்ன்மே வந்துகுன்னமே (சரு)

லக்ஷ்மி தரு.

ஆசையுள்ளயெந்தன்நாதா அழைத்ததேதய்யா
பாசம்வைத்துநீ யெந்தனுக்கு பகருவீர்மெய்யா
பகரும்நீமெய்யா யெனக்கு புகலும்துய்யா (ஆதி)

கிருஷ்ணன் கவி.

தார்புனல் கொன்றைமுல்லை சடைதனில் யணிந்தயெந்தன்
மார்தனி லமர்ந்தமானே மானிலந் தனிலேநாமும்
வேறொன்றும் குறைவில்லாமல் விளங்கிடும் தாசருக்கு
சீர்தந்து வெகுவதாக திகழ்கொலு லமருவோமே.

நாரதன் தரு.

ஆதிசிவன்சேதிகேட்டுமே அந்தநாரதரும்
அதிகுருசாவோடிவாராரே வைகுந்தம்தேடி

பாதிமதியோன்பவுசை வாங்கவேநாரதமுனி
பாரளந்தோன் இடத்தைதேடியே (ஆதி)

ஆணமுகனுக்குபெண்ணைகேழ்க்கவே அவருக்குங்கொடுப்பாராரு
அரியவேண்டுமென்றுசொன்னாயே நாரதமுனி
மாயனோடுபரமன்தானுமே இன்னுமல்லுசெய்ய
மகிழ்வாகலகம்செய்யவாராரோ நாரதமுனி (ஆதி)

நாரதர் தரு.

பாரளந்தமாயாநேயா பாதம்வந்தனம்
நாரதன்பணிந்தேன் நமஸ்காரம்தந்தனம் (பா)

கிருஷ்ணன் தரு.

வாழிவாழிநாரதனே வந்ததேதுக்குநீ
தாழ்வில்லாமல் சொல்லிடுவாய் இந்தபோதுக்கு (வா)

லக்ஷ்மி தரு.

திருலோகமும்வொருநொடியில் சுற்றும்தீரனே
வர்மமில்லாவாழ்ந்திருப்பாய் வாரும்பேரனே (திரு)

நாரதன் தரு.

வந்தசேதியுந்தனுக்கு ஓதுவேனம்மா
சிந்தையும்மகிழ்ந்து கேழ்ப்பாய்நீயுமேசும்மா (வா)

கிருஷ்ணன் தரு.

சேதிதன்னைவோதவந்த நாரதாகேளுமந்த
நீதியையுரைத்திடுவாய் எனக்கிந்தநாளும் (சேதி)

லக்ஷ்மி தரு.

நல்லதென்றும்கெட்டதென்றும் நவலவேண்டுமே
நாரதனேநானரிய புகலவேண்டுமே (நல்)

நாரதமுனி கவி.

இத்தரணி யீசனுக்கும் எழில்பெரும் தேவியாதம்
மைந்தனும் விநாயகர்க்கு மணமது முடிக்கவேண்டி
உந்தனை தேடிவாரார் ஒருபெண்ணுகிடைக்காதலே
வந்தேனுன் சேதிசொல்ல வாக்கிய மருகிவீரே

கிருஷ்ணன் தரு.

ஆனல்சந்தோஷமாச்சுதே நாரதாகேளும்
அதிகயின்பமாய்போச்சுதே.
தேனரிளங்கொடியை செல்வமருமகற்கு
நானேபெண்பார்த்து நல்மணம்முடிப்பேனே (ஆ)

லக்ஷ்மி தரு.

இன்பவதனபூபனே ஐங்கரர்க்கு
எங்கேபெண்வுண்டுதீரனே
அன்பில்சிரந்தயெந்தன் அருமைமருமகற்கு
துன்பமில்லாமல்பெண்ணை துரையேபார்த்துவருவீர் (இன்)

கிருஷ்ணன் தரு.

தங்கைமகனுக்கென்னடி பெண்ணைக்கொடுக்க
பங்கமவர்க்குமுண்டோடி
சங்கரர்வந்தாலே சடுதியில்சென்றுநான்
இங்கிர்தபெண்ணை பார்த்து இப்போதேவருகிறேன் (தங்)

லக்ஷ்மி தரு.

அருமைசிறந்தநாரதா சடுதியில்சென்று
அரணைவரச்சொல்லும்சீரதா
பெருமையாயவர்மைந்தருக்கு பெண்பார்த்துநாங்களும்
உருமைமணமுடிக்க உண்மையெந்தனுக்குண்டு (அரு)

நாரதன் தரு.

ஏனம்மாவுங்கட்குபுத்தியில்லை இனியதனல்வரும்
ஏற்றபெருந்தொல்லை
பாரம்மாநான்சொல்லும் பழிபாதகமில்லை
பாரும்பாரும்கண்டு நடந்தபின்யென்சொல்லை (ஏன)

கிருஷ்ணன் தரு.

நாரதாயேண்டா வார்த்தைகள்பேசுராய்
நடத்தையிப்படிக்கெல்லாம் உன்கையைவீசுராய்
சீரதாஐங்கார்க்கு செய்யமணமது
தெரியும்பின்யென்னிடம் சேதிகளென்னடா (நார)

லக்ஷ்மி தரு.

நாரதாகலகங்கள் செய்வதுயேது
நாங்களறிவதோ உன்னிடசூது
வேனுனவார்த்தைகள் விளம்புவதேது
பேருவுனக்கிதுமே தகாது (நார)

நாரதன் தரு.

கலகங்களென்றுநீ எண்ணிப்பாராதே
கன்னியேநிசமென்று உண்மைசேராதே
குலங்கள்பேரானாலும் பாராதேமாதே
குணங்கள்யரிவையும் கண்டுசொல்தீதே (கல)

கிருஷ்ணன் தரு.

மைத்துனர்மகனுக்கு எதிருண்டாரு
மாணிலமெங்குமே தொழுகுவார்சீரு
உத்தேசம்செய்துநீ ஒருவனுக்கும்பாரு
உலகத்தில்யாருண்டு அவர்விடக்கூறு (மைத்)

லக்ஷ்மி தரு.

தோத்திரம்செய்திடா பேர்களேயில்லே
சுத்தமாநம்புவோமோ வுந்தன்சொல்லே
கோத்திரத்துக்கேற்ற குணமுணக்கில்லே
கோளுரைசொன்னுலே உனக்குண்டுதொல்லே (தோத்)

நாரதன் தரு.

பரமன்மகனுக் கழகென்பதேது
பார்த்தாலுமாயனே முகம்ரெண்டுகாது
திரமோவயர்பேழை சொல்லப்போகாது
கரசொத்தை ரெண்டுகால்பூதந்தீது (பர)

கிருஷ்ணன் தரு.

திரிலோகமுற்றும் திரிகின்றபேரா
தேசதேசம்விட்டு வந்தாயோசீரா
வர்மம்தனேக்கொண்டு ஏதுகூரா
வழக்கத்தாலினியங்கே பொய்யுரைபேரா(திரு)

நாரதன் கவி.

திரமுடைய மாயவனே சொல்லக்கேளும்
சித்தசனுக் கெதிராமோ விநாயகர்தான்
கரமதிலே மான்மழுவும் சூலமேந்தும்
கர்த்தனுமே யாண்டிகட்ட துணியேதுண்டு

வரமுடைய பார்வதியும் நீலியாச்சே
வைத்துமரு மகனைவொத்து வாழமாட்டாள்
பெருமையுடன் பேசவந்தீர் பித்தன் தன்னை
பின்னாலே வுமக்குதுயர் நேருந்தானே.

லக்ஷ்மி தரு.

நாரதன்சொல்கிற வார்த்தையைப்பாரும்
மன்னாநாயகாபாரும்
நானிலம்நகைத்திடாதோ பரமனின்சீரும் (நா)

கிருஷ்ணன் தரு.

பார்தனில்நம்மைப்போலே பரமனுக்கேது
அந்தபரமனுக்கேது
அதைபார்த்திருந்துயார்கொடுப்பார் மகனுக்குமாது (பார்)

நாரதன் தரு.

உந்தன்மகன்மன்மதன்போல் உலகத்திலேதுசுவாமி
உலகத்திலேதுசுவாமி
அந்தமில்லாபரமனுக்கு அல்லாம்வீண்வாது (உந்)

லக்ஷ்மி தரு.

பட்டுயிடைவுடையில்லாமல் பாம்பையணிந்தார்
அவர்பாம்பையணிந்தார்
கெட்டுகெங்கைமே லாசையாய்மாதையணிந்தார்(பட்)

கிருஷ்ணன் தரு.

பாரில்பத்மாசூரனுக்காய் காயில்மறைந்தார்
அப்போகாயில் மறைந்தார்
பாபளங்தோனில்லாவிட்டால் அப்போதிறந்தார் (பாரி)

நாரதன் தரு.

கொடும்நீலிபார்வதியாள் கோபக்காரிதான்
வெகுகோபக்காரிதான்
அந்தகோதையைப்போல் ரூபமாரிதான் (கொ)

கிருஷ்ணன் கவி.

சரிசரிநீ நாரதனே சொன்ன வார்த்தை
சங்கரனும் இங்குவந்தால் வாட்டும் பார்ப்போம்
கரியுருவாய் வந்தவுந்தன் மைந்தனுக்கு
காரிழையை யார்கொடுப்பா ரென்றுசொல்லி
வெரிபிடித்த பார்வதிக்கு விகல்பம் காட்டி
விக்கினற்கு மனந்தன்னை தகுத்து வைப்பேன்
உரியவனே நாரதனே வுண்மை சொன்னாய்
உன்வார்த்தை சரியென்று உகந்திட்டேனே.

நாரதர் கவி.

தேவகி சுதனுவந்த திருவவு தாரமூர்த்தி
ஆவலாயுந்தன்பாதம் அடியிணை பணிந்தேன் யானும்
கோபமாய் யெந்தன்சொல்லை கொடூரமா சொல்லொணாது
நாவல ரரியசொன்னேன் நடத்தைபின் னரியலாமே.

பரமசிவம் தரு.

வைகுந்தம் வருவது.

காரிழைமடமயிலே சொர்னமே
வைகுந்தம்தேடி தையலேநாடி
நேரிழையாளே துருசாய்செல்லுவோம். (கா)

பார்வதி தரு.

பாரதையளந்தமாயன் தன்னையே
பாவையுந்தேடி மேலேயேகூடி
பரமனேவருவேன் யுந்தன்முன்னையே. (பா)

பரமசிவம் தரு.

மைத்துனர்மன மகிழ்ச்சியாகவே
நன்மையும்தேடி செம்மையாககூடி
மெத்தவும்நாரதன் முன்னேபோகவே. (மை)

பார்வதி தரு.

நாரதன்நமக்கு மிகநல்லவன்
எதுவும்சொல்ல பதமாவெல்ல
சீரதைவுரைத்தவனும் உள்ளவன். (நா)

கிருஷ்ணன் கவி.

எண்டிசையும் புகழ்கின்ற ஏகநாதா
இருதாளை போற்றிமிக ஏற்றினேனே.

பரமன் கவி.

அண்டமெல்லா முண்டருளும் மாயாநேயா
நான்மகிழ்ந் துந்தனையும் வாழ்த்தினேனே.

கிருஷ்ணன் தரு.

திருப்புகழ் சந்தம்.

சிந்தைமகிழ்ந்துமே என்னிடவைத்துன-யிருவோரும்
தேடி-வந்திடும்விதமதை யெந்தனுக்கறிந்திட-மித்தரும்

பரமசிவம தரு.

அந்தமிகுந்திடும்-அயனையும்யீன்றளிள்-பெருமாளே
நான்-வந்திடும்விதமதை-யுந்தனுக்கோதுவேன்-நீகேளும்

கிருஷ்ணன் தரு.

நான்மறையொடுவெகு-மாமறையவர் துதி-பெரியோனே
எனை-ஏனினைந்திவ்விடம் வந்தது-அதையுரை-தெரியேனே

பரமசிவம் தரு.

பங்கையாதன-எங்கிலும் துதிபருள்-தங்தோனே
ஒரு-மங்களகாரியம்-முடிக்திடயெண்ணியே-வந்தேனே

கிருஷ்ணன் தரு.

மங்களகாரியம்-தங்களுக்கோயென்ன-அதைகூறு
அன்றி-பெண்களுக்கேத்தவர்-உன்னிடமிருப்பவர்-அவராரு

பரமசிவம் தரு.

முந்தியமைந்தனும்-வந்தவினயகன்-தனக்காக
இங்கு-உந்தனைதேடியே-வந்தேனே நானொரு-பெண்பார்க்க

கிருஷ்ணன் கவி.

பறமனென்று பேரெடுத்து யாகருக்கு
பாரினிலே வரங்கொடுத்து யதனல்வெட்கி
நிறமுடனே திருநீரும் நெற்றில்பூசி
நீ கெட்டு சுடலையிலே யலைந்ததாலே

வரமுடனே யுலகத்தின் வாழ்க்கையெல்லாம்
வந்துதெரி யாமல்விட் டிங்கே வந்தாய்
திரமுடனே யினிசொல்லால் பங்கமாகும்
சிவனே நீ யிவ்விடம்விட் டேகுவாயே.

பரமசிவம் கவி.

மண்ணையுண்டு மானிலத்தை மிகவுமுண்டு
மாமதியும் கதிரவனும் மனதுவெட்க
விண்ணையுண்டு வேண்டுமா மிருகமதை விளங்கவுண்டு
வெட்கமில்லா தாயுண்டு வேண்டும் நீரை
தண்ணியுண்டு போராமல் வெண்ணையுண்டு
தையலரால் கருங்கல்லால் கட்டுமுண்டு
எண்ணுதலு மில்லாத மத்தினாலே
ஏக்கங்கொண்டாய் யென்னிடத்தி லியம்பலாமோ.

கிருஷ்ணன் தரு.

நாடிருக்கநகரிருக்க நடுசுடுகாட்டில்வாசம்
செய்தவா நீயும்நைய்தவா
வீடிருக்கபாடிருக்க திருவோடுகையில்வைத்த
வீணனே இன்பம்பூணனே
வேலிருக்கவாளிருக்க சூலம்வைத்தகாரணமேன்
வித்தகா வைத்திருக்தவா
நீலியினிடமிருக்க மேலேவொருபெண்ணெதற்கு
நீக்கவே மாதைதூக்கவோ
சாலுவைநிஜாரிருக்க தோலுடைபூண்டதென்ன
வெல்லவோயெங்கும் மிதுமேல்செல்லவோ
மேலணியவட்டிருக்க வாபரணம்பூண்டதென்ன
தகாதோ கட்டபோகாதோ
தண்ணியுமெண்ணையிருக்க தலைதனில்சடையெதற்கு
சத்தியோ அதனால்வெற்றியோ
நன்மொழிகுயிலிருக்க உன்காதில்மானெதற்கு
நங்கையோ சொல்வதுசங்கையோ.(நாடி)

கிருஷ்ணன் கவி.

அந்தமில்லா பரமனே நான் சொல்லக்கேளாய்
ஆனைமுகன் தனக்குபெண் கொடுப்பாரில்லை
மந்தபுத்தி பார்வதியும் நீலியாச்சே
மருமகளை மனையில்வைத்து வாழமாட்டாள்

எந்தனுட பூமிபொருள் எல்லாம் பாரும்
என்னிடமே எதிர்ப்பவர்கள் வுலகில்யாரு
வந்தவழி பார்த்தேநீ போய்தான் சேரும்
வார்த்தையினால் வொருசுகமும் மில்லைதானே.

பரமசிவம் தரு.

என்னயேளிதம்சொன்னாய்மாயவனே — வோய்வோய்மாயவனே
நீ-இருஜாதியல்லவோதான் — மாயவனே
அன்னாள்அயனுக்காகமாயவனே — வோய்வோய்மாயவனே
அடிபார்த்துபங்கப்பட்டாய் — மாயவனே

சுருள். அரியேயென்னிடம் — சரியோவுந்தனே
உரியமாபலியை — நிறையசெய்தவனே. (என்)

வைக்கயிடமில்லாமல்மாயவனே — வோய்வோய்மாயவனே
மார்பில்பெண்ணைவைத்தாய் — மாயவனே
நிக்கநிழலில்லாமல்மாயவனே — வோய்வோய்மாயவனே
நீ-நெடியகடல்போய்படுத்தாய் — மாயவனே

சுருள். நெடியசோமுகன் — கடலில்தேடியே
அடியில்மச்சமா — நொடியில்சென்றவா. (என்)

பரமசிவன் கவி.

இன்னமு மிருக்குதன்னை யெடுத்துமே யெளிதாய்சொல்ல
உன்னிடம் வந்ததாலே யுதாசினம் நேர்ந்துபோச்சி
தன்னைதா னறிந்திடாமல் ஜாதில்லா வார்த்தைசொன்னாய்
பின்னாலே பார்த்துக்கொள்வேன் பித்தனு மானால்தானே.

பார்வதி கவி.

மான்மழு தரித்தகையா மகிபனே சொல்லக்கேளும்
தானொருசேதியந்த தையலை கேட்டுவாரேன்
தேன்மொழிஎன துநாத்தி தெருட்டாத வார்த்தைசொல்வார்
நான்வந்த சேதிதன்னை நங்கையா லறிகுவேனே.

லக்ஷ்மி கவி.

வாரும்நீ எனதுநாத்தி வந்ததனால் மிகவும்நேர்த்தி
சீருடனென்னைத்தேடி தேவியே வந்ததேனோ.

பார்வதி தரு.

ஒருருவாகவந்த யுத்தமுரண்ணன்தேவி
நேருடன்வந்தசேதி நிகழ்த்துவே னரிந்திடாயே. (ஒரு)

லக்ஷமி தரு.

இன்பமுள்ள நாத்தியரே யெடுத்துரைப்பேன்கேளுமம்மா
பொன்பொருளுபூஷணமும் பூதலத்தோர்தேடார்களே

சுருள். புண்ணியவதியே நன்னேயமாக
கண்ணிரைந்திட கணவன்பார்க்குரார் (இன்)

பார்வதி தரு.

என்மகனுக்கென்னுயம்மா இன்னமழகுண்டோசும்மா
மண்ணவரும் விண்ணவரும் முன்னே துதிசெய்வார்களே. (என்)

சுருள். மாதேயிப்படி வோதலாகுமோ
பேதமெப்படி சொல்லபோகுமோ (என்)

லக்ஷமி தரு.

சொல்லலாகாதென்றுரைக்கும் தோகையரேயினியுனக்கு
நல்லநடையதுவுங்கெட்டு நாணமில்லாயிங்கேவந்தாய்

சுருள். நாரியர்க்கிது அழகல்லவே
பாரினில்வர புகழைசொல்லவோ (சொல்)

பார்வதி தரு.

புகழ்தருகும்பாருமம்மா புண்ணியவதியுனக்கு
இகக்ஷிசொல்லவேண்டாம்நீயும் என்சுதற்குபெண்தருவாய்

சுருள். ஏதுயிப்படி மாதேயென்னிடம்
தீதுசொல்லிட காதலாகுமோ (புக)

லக்ஷமி கவி.

நடையதினல் மேலோரும் கீழோராவர்
நடையதினல் கீழோரும் மேலோராவர்
நடையதினல் பெண்ணுமக்கு யார்தான்
நடையதினல் ஊங்களுக்கு நாணமாச்சே.

பார்வதி தரு.

நடைதவரியேபோனது என்னடி
நாயத்தைநன்றாய்சொல்லடி முன்னடி
உடைவுனக்கில்லையென்று சொன்னையடி
உண்மைக்குண்மையீயுமே பாரடி.

சுருள். நங்கையேநங்கையே இங்கிர்தமங்கையே
சங்கைகள்கெட்டு பங்கமேசெய்குவேன் (நடை)

லக்ஷ்மி தரு.

பங்கமென்னசெய்வது என்னடி
அய்யங்கார்க்கந்தமும் ஏதடி
சங்கரார்க்குயெங்கே துணியடி
உங்கள்சிவன் எங்கும்நின்றாண்டி

சுருள். ஓதடியோதடி மாதேயரிந்திட
ஏதடியேதடி இங்கேநில்லாதடி (பங்)

பார்வதி தரு.

நில்லாதேயென்றயடி அடிபோடிகுடிகேடி
எல்லாநானரிவேண்டி நீபோடி
பல்லால்சொன்னால் சாபம்பொல்லாதடி
சொல்லாலுமுனை வாட்டுவேன்பாரடி

சுருள். தையலேதையலே யோசித்துப்பாரடி
நையவேமன்னனும் அடிக்குரான்தப்படி. (நில்)

லக்ஷ்மி தரு.

தப்பென்றால் இன்னம்சொல்ல
ஒப்பனமலையரையன் அல்லவோ
இப்புவியில் நீ இன்னமும்விள்ளவோ
துப்புவந்தன்நாதனுக் கல்லவோ.

சுருள். தூத்துவேன் மாத்துவேன் பார்வதிபாரடி
நேர்த்தியுடனென்னை தடுப்பவராரடி

பரமசிவம் தரு வேறு.

பங்கமும்போகுதடி பார்வதியே அடிபார்வதியே
நம்மைப்பார்த்தோர்நகைப்பாரடி பார்வதியே. (பங்

பார்வதி தரு.

நகைத்தாலதர்க்கென்னுநாயகரே சுவாமிநாயகரே
அவள் நாயத்தைநானறிவேன் பிராணநாதா(நகை)

லக்ஷ்மி தரு.

நாயத்தையரியலாம் நீலியரே யிங்குநீலியரே
நடவடிவிட்டப்புரம் நீலியரே. (நா)

கிருஷ்ணன் தரு.

நடவென்று சொல்வதென்னுலக்ஷ்மியே அடிலக்ஷ்மியே
நீ-மடையதனம்செய்யாதடி லக்ஷ்மியே (நட)

பரமசிவம் தரு.

மடையனென்றிடமாயவனே ஓகோமாயவனே
உனக்கிடபுத்தியல்லவோதான் மாயவனே(மடை)

கிருஷ்ணன் தரு.

இடையனென்றபோது யீஸ்பரனே ஒய்யீஸ்பரனே
இங்கு நீவரலாமோ யீஸ்பரனே (இ)

பரமசிவம் கவி.

மாயவனே சரிசரிதான் நல்லதாச்சி
வர்மமில்லா வார்த்தையினு லெல்லாம்போச்சி
விநாயகருக்கு விவாகமில்லா விட்டாலென்னு
நாளைவரும் வுந்தனுக்கு கெடுதிகாலம்.

கிருஷ்ணன் கவி.

அபாயமென்று நான்வந்தால் கார்க்கவேண்டாம்
ஆனைதனை கார்த்தசக்கரம் மிருக்கும்போது
உபாயமெல்லாம் நானரிவேன் போய்நீசேரும்
உந்தனு லாவதெனக் கொன்று மில்லைதானே.

விநாயகர் கவி.

மாயனுல் பரமன்தானும் மனமது வெட்கிசோர்ந்து
நேயமாய் வருகும்போது நின்னடி சிலம்பொளிக்க
அபாயமோ யென்னவென்று ஆனைநல் முகமிலங்க
உபாயமே யரிந்துவிக்ன விநாயகர் வருகின்றாரே.

விநாயகர் தரு.

சங்கரர்மைந்தரிதோவந்தார் ஐங்கரமூர்த்தி
பொங்கமாய் வரங்களைதந்தார்
மங்கைபார்வதியும் மனமகிழ்ந்திடும்லோலன்
தங்கும்பிராணவடிவான தத்துவலோலன்

சுருள். தாரணியெங்கிலும் பேரூர்போற்ற
காரணபொருளென்று யாவரும்சாற்ற. (சங்)

தொந்திகுலுங்கிசடையாட அரக்கரெல்லாம்
வந்துபணிந்து பயந்தோட
பந்திபந்தியாய்வேதம்பாடி மறையோர்கூட
விந்தைதேவகன்னிகள் நின்றுநடனமாட

சுருள். வீணைதொனியுடன் காணவும்நாணியர்
ஆனைமுகமுள்ள தானவிநாயகர். (தொந்)

மார்பில்புஷ்பமலர்கள்சாற்றி கதிரொளிபோல்
தார்குழல்பணிகளும் போற்றி
கார்குளிரிவரையும் கண்டோர்சங்கரர்க்குமேலே
பேர்கொண்டுபதந்தன்னை இவரைபணிகுவாராலே

சுருள். இத்தலமெச்சிய உத்தமபாலன்
பத்தியதாகவே சத்தியவேதன். (சங்)

நல்லமொழியுடையசீலன் வில்வநகரில்
எல்லைபேட்டையில்வாழ் அனுக்கூலன்
பிள்ளைவேளாளர்குலம் பிரந்தருளியபாலன்
அல்லலகற்றுங்கந்தர் அவர்க்குயின்பநல்லோலன்
அன்பனனமுனி சாமிக்கருள்தற
இன்பங்கொண்டிச் சபையுளோர்கெடிபெற(சங்)

விநாயகர் கவி.

எந்தனின் தந்தைதாயேநீங்க ளேங்கியே யிருப்பதென்ன
மைந்தனை னிருக்கும்போது மனம்நொந்த விதங்களென்ன
சந்தேக முந்தனுக்கு தான்வந்த வரலாறென்ன
வந்தனம் வுந்தன்பாதம் வாக்கின லுரைசெய்வீரே.

பரமசிவன் ஓரடி தரு தர்க்கம்.

மைந்தாநீவாழ்ந் திருப்பாய் எங்கள்வர்மத்தை
என்னென்று சொல்வோமடா.

(விஞ.) எந்தாய்யதென்னவிதமதை எந்தனுக்கன்பாகவுரை.
(பரம.) பாலாயென்பாலகனேயிங்கே பங்கமும்நமக்குநேர்ந்ததடா
(விஞ.) பங்கமென்னவந்ததம்மாதாயே சங்கையறிந்திட
(பரம.) உந்தனுக்குமுடிக்கயந்த உகந்தமாயனைதேடிபோனேமடா
(விஞ.) போனலதற்கென்னயங்கு பொல்லாங்குநேர்ந்ததைசொல்லு [மைய்யா
(பரம) மாலுமங்கைலக்ஷ்மியும் என்னைமானபங்கம்வரசொன்னாடா
(விநாய) என்னுசொன்னாவற்றை இன்னதென்றறிந்திடகூடுமையா

பரமசிவம் கவி.

கண்மணி யாகவந்த கருத்துள்ள் யெந்தன்சீலா
நன்மையா மாயன்சொன்ன நடத்தையு மென்னசொல்வேன்
தன்மையு மில்லையென்று தானொரு வெரியனென்றும்
உண்மையா யுரைத்ததாலே வுருகிநான் வாடுறேனே.

விநாயகர் கவி.

தாய்தந்தை யுரைத்தபோது தனையனும் கோபங்கொண்டு
நேயமா மாயன்தன்னை நிமிஷத்தில் கொல்வேனென்று
வாயினில் புகையெழும்ப வந்தடியார் வணங்க
உபாயமே மரிந்துகணேசர் வுத்தம ருரைக்கின்றாரே.

விநாயகர் தரு.

அப்படியாயவன்சொன்னனய்யா அந்த
தப்பிலிபயலைநான் ஒழித்திடுவேன்மெய்யா
எப்புவியுமென்னை கண்டுவாட நான்
இப்போதேகொல்கிறேன் தப்பாமல்சாட
மடப்பயலவனென்னதீரம் இப்போ
மல்லாடிபார்க்கிறேன் நான்வெகுநேரம்
இடப்புத்தியென்னிடமேகாட்டி வந்து
எதிர்த்தாலுங்கொல்லுகிறேன் எமலுலகம்வாட்டி
தடைபடாவில்லதனைபூட்டி யானும்
தண்டிக்கவலுவுண்டு தவடையிலேசெட்டி

சண்டனும்மதிமயங்கிவாட இப்போ
தண்டிக்கிறேனந்த லக்ஷ்மியுங்கூட
எந்தனையுமிழிவுசொன்னபோது யவனை
கொந்திகொலை செய்திடவே ஞாயமுண்டு தோது (அ)

விநாயகர் கவி.

இடையன்தன் குலத்தில்வந்த இருமாப்பு கொண்டான் தன்னை
மடையன்தன் புத்திகாட்டி மாராட்டம் சொல்லவந்தான்
கடைவிழி பொரிபறக்க காலனுக் கனுப்பவேண்டும்
தடைமீரி தடுக்கவேண்டாம் தாய்தந்தை வழிவிடீரே.

பரமசிவம் தரு.

பதராதேபொரும்பொரும் பார்க்கனுளிருக்குது
மைந்தனே மைந்தனே
சிதராதகாரியம் சதிராய்முடிந்திடும் மைந்தனேமைந்தனே

பார்வதி தரு.

இப்போதுசமர்செய்யயேகவொன்னுதப்பா பாலனேபாலனே
அம்புமதியணித்தஅரன்மொழிகேளடா பாலனேபாலனே

விநாயகர் தரு.

தப்பிதம்சொன்னவன்தலையைத்துணிக்காமல் அன்னையரே
ஒப்புமோயென்மனம்வொருக்காலும்விடுவேனோ தந்தையரே

பரமசிவன் தரு.

இருக்குதுநாள்கொஞ்சம்யென்மொழிகேளடா பாலனேபாலனே
பொருப்பதுபூமியாள்பவரல்லவோ பாலனேபாலனே

விநாயகர் தரு.

தந்தையேவுன்வார்த்தைதடைசொல்லவில்லையோ தந்தையரே
மைந்தன்வுனக்கடங்கிமகிழ்ச்சியாய்யிருப்பேனுன் தந்தையரே

விநாயகர் கவி.

தந்தைசொல் மிக்கவொன்றும் மந்திரமில்லை யென்றும்
விந்தையாய் அவ்வைவாக்கு மேன்மையாய்தெரிந்திருந்தும்
குந்தக மொன்றில்லாமல் கூரியதாயின்சொல்லை
மந்திரமாககேட்டு மர்மமாய்யிருந்திட்டேனே.

கிருஷ்ணன் கவி.

மதங்கொண்ட மதுகயிடா சூரன் தன்னை
மடிக்காமல் இனிசும்மா யிருப்பதுண்டோ
அதஞ்செய்து அடித்திடவே அஸ்த்திரமுண்டு
அவர்களையே சமர்செய்ய வரவேசொல்லு
பதங்கொண்டு அரக்கர்களை செயிக்கவேண்டி
பாரளந்த மாயவனு னிருக்கும்போது
மிதமில்லா வார்த்தைசொன்ன மூடன்தன்னை
மிரளாமல் என்னெதிரே வரச்செய்வீரே.

மதுசூரன் கவி.

அப்படியா மந்திரியே நல்லதாச்சு
அரனுடனே பிர்மன்வந் தெதிர்த்த போதும்
இப்படியா சொன்னவனை விடுவதில்லை
என்தேவி நங்கைவல்லி தன்னைநீயும்
ஒப்புடனே வுன்கணவன் சமர்கள்செய்ய
போகிறதால் வுனையழைக்க சொன்னுறென்று
ஒப்புமெந்தன் மாதரசை வுண்மையாக
ஓடோடி இங்கனமே வரச்சொல்வீரே.

நங்கைவல்லி கவி.

சங்கரன் தேவியான தையல்பார் வதிக்குமேலாய்
இங்கித பணியுடுத்தி யிருபுரம் தாதிசூழ
பொங்கமாய் கணவன்தானும் போகிற சேதிகாண
நங்கைவல் லியுமெழுந்து நாயகி வருகின்றுளே.

நங்கைவல்லி தரு.

திங்கள்முகமிலங்க நங்கைவல்லியாள்மாது
திகழும்கொலுவில்வந்தாளே தாதியர்சூழமகிழும்கொலுவில்வந்தாளே
எங்கும்பிரகாசிக்கும் இருகைகடகந்துன்ன
தங்குமதனிடத்தில் தையல்ரதியாளென்ன

சுருள். தத்துவமிகுத்திடும் உத்தமபூரணி
எத்திசைமெச்சிடும் நற்றவகாரணி (திங்)

ஆடைபரிமளிக்க அருவையர்கள்களிக்க
பேடைநடைநடக்க பாடகங்கள்வெளிக்க

சுருள். பெண்மணிவிண்மணி கண்மணியென்ன
பொன்மணிநன்மணி தன்மணியென்ன (தி)

கொண்டவண்டினம்பாட கண்டோர்மங்யகிவாட
எண்டிசையுங்கொண்டாட வந்தான்மதனுநாட

சுருள். இந்திரமுனிவரும் சந்திரரஞ்ச
வந்தெதிர்நர்க்கினி விந்தையாகொஞ்ச (திங்)

நாதரழைக்கதேடி ஏதுகாரணம்சேடி
மாதர்களேநாம்கூடி காதலாய்சங்கீர்த்தம்பாடி

சுருள். மங்கையேயிங்கீர்த சங்கீர்தமாக
நங்கையேவாருங்கள் பொங்கமாயேக (திங்)

நங்கைவல்லி தரு.

சருணமுந்தன்பாதத்திற்கு தருணமய்யனே
இந்தவையலாளேயழைத்தசேதி புகலுமையனே (சரு)

மதுசூரன் தரு.

கருணைபெற்றுவாழ்ந்திருப்பாய் காரிழையாளே-ஒரு
காரணத்தைநானுரைப்பேன் கருத்தைநீகேளே (க)

நங்கைவல்லி தரு.

கருத்தையின்னதென்று எந்தன்நாதனே-அதை
திருத்தமுடனுரைப்பாய் திரவியபோதனே (கரு)

மதுசூரன் தரு.

அண்டமுண்டோன்பேரில்சண்டை செய்யப்போரேனே
எண்டிசையும்தானடுங்க செய்துவாரேனே (அ)

நங்கைவல்லி தரு.

அய்யய்யோயிதுவென்ன மோசம்மோசமய்யனே
அந்ததெய்வத்தின்மேல்சண்டை செய்யபோமோதுய்யனே (அ)

மதுசூரன் தரு.

தெய்வமொன்றுல்கையுங்காணும் நீளுமோபெண்ணே
இந்தவையகத்தில்யெதிரியென்றுல் தாளுமோகண்ணே (தெ)

நங்கைவல்லி தரு.

எதிரியென்றபோனசூரர் எவர்களியிருந்தீர்
அந்தயெதிர்த்தெதிர்த்துமண்ணின்மீது அவரும்மறைந்தார் (எதிர்)

மதுசூரன் கந்தார்த்தம்.

மண்ணினில் மறைந்தாரென்ற மடமயி லாளேகேளாய்
விண்ணுலோர் யெவருங்கண்டால் வேண்டுவா ரதனைவிட்டு
கண்ணனும் மதியாதாலே கட்டியே யடித்துமோதி
எண்ணத்தின் போலே செய்ய.

மதுசூரன் தரு.

ஏதடிதடைகள்பேசுராய் அரியாமலே
மாதேவந்தெதிரில் வீசுராய்
வாதடியவன்செய்ய வனுவுண்டோயென்னைவெல்ல
பூதலந்தனில்செல்ல புதுமைசொன்னாய்மெள்ள

சுருள் பூட்டுவேன்கணை வாட்டுவேன்நான்
வோட்டுவேன்தனல் மூட்டுவேனடி (ஏத)

நங்கைவல்லி கந்தார்த்தம்.

ஓட்டுவே னென்றுசொன்ன வுத்தம பிராணநாதா
கேட்டது மில்லையோதான் கெடிபெற்ற மாயனென்று
நாட்டமா வந்தெதிர்த்த ரணமுகயிரணியன்தன்னை
வாட்டவே மனதி லெண்ணி.

நங்கைவல்லி தரு.

வந்தமாயவராச்சுதேதூணிடமாக சிந்தைமிகவும்போச்சுதே
வந்துநரசிங்கமாய் கொந்திவுடல்பிளந்து
விந்தைவுடனேயிரத்தம் சிந்தனைசெய்தவர்மேல்

சுருள். வீம்புகள்செய்திட தீங்குகள்நேரும்
பாம்பின்மேல்நடித்திட பாதனல்சேரும் (வந்)

மதுசூரன் தரு.

என்னடிநீபடுநீலியிப்போ யேகமாகமாய்பேசுராய்கோடி
மன்னர்மன்னர்போற்றும் மகாதேவரென்றாலும்
மதங்கொண்டுவந்தாலே வதைக்காமல்விடுவேனோ

நங்கைவல்லி தரு

வந்தசெய்வேனென்கின்றீர் நாதாயெந்தன்நாதா
வலுவால்கொல்வார் வெகுசூதாவெகுசூதா
இரக்கம்பேசாமலே யெந்தனைவைகுவீர்
மதத்தினாலேநீயும் வல்லாண்மைபேசுநீர்(வதை)

மதுசூரன் தரு.

அண்டர்முனிவரென்றால் யீடோடியெனக்குயீடோடி
அந்தஅரிமாலுமெனக்கொரு சோடோடியவன்சோடோடி
கண்டறியாமலேகதை யெல்லாம்பேசுராய்
சண்டைக்குபோவதை தடைசெய்துவீசுராய் (அ)

நங்கைவல்லி தரு.

மனிதரென்றவரைநீபார்க்காதே நீயும்பார்க்காதே
இந்தமங்கையாள்சொல்லுனக்கு யேர்க்காதே (ம)

மதுசூரன் கந்தார்த்தம்.

எடுத்தெடுத் தென்னைநீயும் என்னதான் தடுத்தபோதும்
விடுத்திட போரதுண்டோ வீணிலே மாயன்தன்னை
அடித்திட வலுவுமுண்டு அதற்குநீ யஞ்சவேண்டாம்
நடித்திடா ரதத்தைத் தாண்டி.

மதுசூரன் தரு

நாகரீகமுடனெழுந்தாரேவெகு வேகத்துடனேதுடர்ந்தாரே
அண்டர்கள்முனிவர் கண்டெதிரலரிட
நின்றுயரக்கரெல்லாம் நாடிடவே-அவன்
விண்டுகாலனும் பயந்தோடிடவே
தட்டியேதோள்தட்டி நெட்டிநொக்கலிகொட்டி
தவலும்முரசுகளும் மரிந்திடவே-நல்ல
பவருடன்சேனைகள் நிறைந்திடவே
கண்ணனுமயர்ந்துமே விண்ணினில்மரைந்திட
கணைகள்தனையேமிக்க எடுத்தேனே-தோளில்
கையால்வெற்றிசங்கமும் பிடித்தேனே.

மதுசூரன் கவி.

முரசுகள் தொனிமுழங்க மூர்க்கம தாகவந்தோம்
பறையண்த தன்னைசாற்றி பராக்கிரம்ம மாகவோடி

விறைவாக வந்தயெந்தன் வீரத்தை யொத்ததம்பி
திரமுடன் மாயன்தன்னை சீக்கிரம் கொன்றுவாராய்.

கயிடன் கவி.

அண்ணனு ருரைத்தசேதி அன்புடன் காதில்கேட்டு
திண்ணமா மாயன் தன்னை க்ஷணத்தினில் கொல்வேனென்று
எண்ணத்தைப் போலேநாமும் எமபுரம் சேர்க்காவிட்டால்
கண்ணனை ஜெயிப்பேனென்று கயிடவன் புரப்பட்டானே.

கயிடன் தரு.

ரணரங்கசூரரேவாரீர் நமது
நால்வகைசேனையும் வருகுதாபாரீர்
குணமுடன்தொணியதுசூட்டி நல்ல
கோவென்றசத்தமும் பேரிகைகாட்டி
எண்ணியயெண்ணமு மிஃடாயவன்
யிருமாப்பையடக்கியே கைவிட்டுசோறே
அண்ணனுர்சொல்செவி கேட்டவனே
அங்கம்பிளந்திட பாடுவேன்பாட்டு
வெடியுடன்பேரிகை யடித்தான்வெகு
விண்டலத்தவர்கள் ரஞ்சமுரசுகள்பிடித்தான் (ரண)

கிருஷ்ணன் கவி.

பேரிகை சங்கநாதம் பிடியடா வார்த்தைதன்னை
மீறிடா செவியால்கேட்டு வெகுண்டுமே மாயன்தானும்
சீரிடா கண்சிவந்து திடுக்கிட யதட்டிமீறி
ஆரடா வென்றுசொல்லி யசுரன்மேல் புரப்பட்டாறே.

கிருஷ்ணன் தரு.

எடுத்தான்சிலகணை தனை தனைவாரியே
எழுந்தனன்கோபம தாகிடவே
விடுத்தேன்பல மாரிகள்பெய்யவே
வீணிலேயவனுயர் போக்கிடவே
விண்டலத்துதேவர்களும் மண்டலத்துமூவர்களும்
கண்டவிடங்களெல்லாம் காணுமல்வோடிடவும் (எடு)

கயிடன் தரு.

பூட்டியுன்மீதுகணைகளை பூமாரிசொரிந்திடவிட்டேன்பார்
ஆட்டியகணைகளை ஆயிரமாயிர அமோகபாணம்தொட்டனடா

சுருள். அகிலலோகமும் கிடுகிடுவெனவே
பகலகிரணமும் பளபளவென்னவே. (பூட்)

கிருஷ்ணன் தரு.

நாடியிதோவீரமும்சூரமும் நானறிவேனடாவோடாதே
தேடிவரகணைகளைசிலையது சின்னபின்னமாவோடாதே

சுருள். தீரமும்வீரமும் நானறிவேனடா
கோரமும்தாகவே சிலையெடுத்தேனடா. (கா)

கயிடாசூரன் தரு.

எடுத்தேன்சிலகணைகளைவாரியே இந்திரலோகமும்நடிங்கிடவே
பிடித்தேனிதோயக்கினியஸ்திரம் பேருலகெங்கும்வோடிடவே

சுருள். பேயனேயென்னிடம்வந்து மாயனேசமர்புரியும்
ஆயனேயுன்னைவிடவும் ஞாயமுண்டோபூவுலகில். (எடு)

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

நாயமு மில்லையென்ற நவிலுநீ சூராகேளாய்
உபாயமே யரிந்திடாமல் லுன்னிட தமையன்பேச்சை
அபாயமே கேட்டுயிங்கே யமரதுபுரிந்துவந்தாய்
சடாசென யெழுந்து வில்லில்.

கிருஷ்ணன் தரு.

தாக்கினரேகயிடன்தன்னை போக்கினரே
மாய்க்கவேயவன்சிரம் மதுசூரன்தான்கண்டு
போக்கிரியாரென்று புரப்பட்டுவந்தாரே(தாங்)

கிருஷ்ணன் கவி.

வருந்தியே சண்டைசெய்ய வந்திடும் சூரனேகேள்
பொரிந்தியே யெனையெதிர்த்து பூமியில் யெவர்கள்வாழ்ந்தார்
தெரிந்திடா விதமுமாக தீரனுன் தம்பிமாண்டான்
அரிந்திட சக்காமுண்டு யரக்கனே யேகுவாயே.

மதுசூரன் தரு.

வீரியம்பேசிடுதீரனேயென்னெதிர் நில்லடா-இந்த
விண்டலம்தனிலெந்தனைசெயிப்பவர் சொல்லடா
தேரியெறநீயுமெந்தனுக்கொருவித புல்லடா
நீயறியாமலேகண்ணனேயிவ்விடம்விட்டு சொல்லடா

சுருள். நீட்டியருஞ்சரத்தால் வாட்டிநீயிப்பொழுது
ஓட்டிவதைக்குமெந்தன் மேட்டிமைபாரடா. (வீர)

கிருஷ்ணன் தரு

வடிக்கணையெடுத்துன்னை மடிக்கிறேன்பாரடாசூரனே
மனமதுவெட்க்கியே நிலைகலங்கிடவேதீரனே
நொடிதனிலுந்தனை முடிக்கிறேன்பாரடாவீரனே
நூற்றியெட்டுதரம்சமர்கள் செய்யவேவந்தாய்மாரனே

ச. நோகவும்படைகளெல்லாம் சாகவும்விட்டேனுந்தனை
சாகவேகாலமுனக்கு வேகமாவோடிபோடா

மதுசூரன் கந்தார்த்தம்.

வடிக்கனை தொடுத்துவிட்ட வலுவிலா பயலேகேளாய்
கெடிக்கிங்கே பயந்தேனென்று கெம்பீரம் கொள்ளவேண்டாம்
நொடிதனி லுன்னைவாட்ட நோக்கியே தண்டெடுத்தேன்
சடிதியில் நீயும்மாள.

மதுசூரன் தரு.

தாக்கிநிருத்தியடித்தேன்கதாயுதத்தால் நோக்கிமுறியயடித்தேன்
போக்கிரியேயுன்னாலேபோர்செய்யமுடியுமோ சாக்கிரதையாக
[மேவதனைபட்டுநீவோடடா (தாக்)

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

ஓடிவிட்டே னென்றெண்ணி பார்த்தசூரா
யுனைவிட்டு போரதுண்டோ வாடாமூடா
சாதித்து யெமலோகம் சேர்க்கவுன்னை
சரமுண்டு யின்னமும் மனேகமாக
கூடுவிட்டு வுயிர்போக காலமாச்சு
கொல்லுகிறேன் னிவ்வேளை நல்லதாச்சு
காடுசெடி கொடிகளெல்லாம்
தீர்ந்துபோக.

கிருஷ்ணன் தரு.

கனகாயஸ்திரமெடுத்தேன் அரக்கர்சேனை
தனலாபோகவேமுடித்தேன்
தினகரனெழுந்திட செந்தூள்மழுங்கிட
அனலாய்யனேகம்பேர்கள் அங்கெங்கும்மடிந்திட (வன)

மதுசூரன் தரு.

அக்கினியஸ்த்திரமிதோ எடுத்தேனே-யிதோ
மிக்கயுந்தன்மீதிலனன் விடுத்தேனே
தக்கபாணம்யெடுத்துசர மீட்டிநான்விடுத்தேன்
திக்குதிசைநீவோட ஜெயமதுகொடுத்தேன் (அக்)

கி ஷ்ணன் தரு.

ஓடிவந்தேனேநான் யெதிர்த்தேனே சூரா
உக்கிரகோபங்கொண்டு யிதோமடித்தேனே
வாடிமனதுநொந்து வலுவுகளழிந்திட
கூடியெமனுலகம் கும்பலாய்சென்றிடவே. (ஓடி)

மதுசூரன் தரு.

ஓடிவரதேடினேன் பிடித்தேனே-மாயா
வாடியுந்தன்மனஞ்சோர அடித்தேனே
கோடிகோடியாசரம் கூட்டிவிட்டெறிந்தேனே
நாடிப்போகவேவுயிர் நகரம்விட்டோடிடவே (ஓடி)

கிருஷ்ணன் தரு.

சக்கரம்தன்னைநான் எடுத்தேனே-சூரா
பக்குவமறிந்துன்மீதில் விடுத்தேனே
தக்கதக்கபடிக்கி சக்கரமதுபூரவே
உக்கிரமுடையசூரன் உயிரதுமீரவே (சக்)

மதுசூரன் கந்தார்த்தம்

மாயனே விட்டசக்கரம் மதத்தையேபோக்கி நாங்கள்
வாயினி லடக்கிக்கொண்டோம் வலுவதை கண்ணால்பாரும்
நீயினி ஜெயிப்பதில்லை நின்றயென் யெதிரதாக
உபாயமா நினைந்த கிருஷ்ணா.

மதுசூரன் தரு.

உன்னைவிடுவதேதடா செயங்கொள்ளாமல் தன்னைபடுவதேதடா
உன்னைவிடுவதேது தன்னைசெயங்கொள்ளாமல்
இன்னமெவர்வந்தாலும் பின்னம்செய்குவேனானே (உ)

பொது கவி.

முடிக்கியே கிருஷ்ணன்விட்ட மூர்க்கமா சக்கரம்தன்னை
அடக்கிய சூரன்கொள்ள ஆயாசப் பட்டுமாயன்
நடக்கையால் விட்டுமாயன் நாமினி செய்வோமென்று
கடக்கப்போய் கண்ணன்தானும் கதரியே புலம்புவாரே.

கிருஷ்ணன் தரு.

புரங்கொடுத்தோடலாச்சுதே அய்யய்யோசிவமே (புர)
புரங்கொடுத்தோடலாச்சே கரிந்துசக்கரம்போச்சே
வரங்கொடுக்குமாயனல் வரமும்பெறவேண்டும் (புரங்)

ஆதியில்முதலைதன்னை நீதியாயருத்தசக்கரம்
ஏதினல்குரைவந்ததோ யீசாசர்வேசாநேசா
ஆனைமுகவர்க்கு அருவையைகேட்கவந்த
மானையேந்துமீசனும் மனதெப்படிசொல்வாரோ (புரங்)

வந்தேன்கைலைதேடி மைத்துனுந்தனைநாடி
சிந்தைமகிழவோடி சிவனேவந்தேனேவாடி (புரங்)

கிருஷ்ணன் தரு.

அம்பலத்தாடும்மீசா அம்மைசிவகாமிநேசா
துன்பத்தைதீர்க்கும்வாசா துயரால்வந்தேன்சர்வேசா (புரங்)

சுருள். தோதகமில்லாதுன் பாதமேவந்தனம்
வேதங்கள்போற்றிடும் மாமாவேதந்தனம் (புரங்)

பரமசிவன் தரு.

ஏதுக்கென்னிடம்பாதமேகெதியென்று வந்தாய்கண்ணனேநீ
மாதுக்குவந்திடமுதைக ஏநிகமாய்கொண்டாய்
அன்றைக்குநீயுமிப்போதுக்கு என்னிடமாசைகளேது
சூதுக்கோயென்னிடம் வந்தாயோயிப்போது (ஏது)

கிருஷ்ணன் தரு.

தெரியாமல்சொன்னேன்மாமா உரியயன்பர்க்குநேமா
சரியோசொல்வதுதாமா அரிவைகைவிடலாமா

சுருள். கரியமேனியன் மதுசூரனலேவுயர்
தரியேன்தரியேன்யினி சங்கராயென்செய்வேன் (தெரி)

பரமசிவன் தரு.

தோலுடைமான்மழுதரித்து நான்வெகுதீதுயதைமறந்து
மேலதுசக்கரம் வந்தவன்வந்ததுயேது
இன்றைக்கென்தன்வேலையா சூலமும்அறமும்போச்சோ
மாலேயென்வோடதை மறந்திடலாச்சே. (தோ)

கிருஷ்ணன் தரு.

தங்கையரேயுடன்பிறந்த தமையன்வந்தேனம்பா
மங்கையரேயீசன்தேவி மனமகிழ்ந்துகாருமம்மா

சுருள். மாதரிவீரி அகோரியேயுன்னிட
மாயமரியாமலே வாயாலனேகம்சொன்னேன் (தங்)

பார்வதி தரு.

தங்கையாநானும் நங்கையா
நங்கையடாநானுனக்கு மங்கையாள்நீலியாச்சே
யெங்குமில்லாமலேபரையன் யீண்றெடுத்தமகளென்ருய் (தங்)

கிருஷ்ணன் தரு.

மருமகனேமருமகனே மாதேவர்தன்மகனே
ஒருமையுடனுன்னைதேடி வோடிவந்தேனப்பா

சுருள். உத்ததுணையது சுற்றத்தாரில்லை
சித்தம்துணிந்துமே நத்திவந்தேனே (மரு)

விநாயகமூர்த்தி தரு.

பெண்பார்க்கவந்திட தந்தையையும்தாயையுமநீ
விண்ணனம் சொன்னவனல்லவோ
நீயும்வீணனேகெட்டவீணனே கெட்டவீணனேசிட்டநில்லாதடா
மானமெல்லாம்கெட்டு போச்சுதோயிப்போ
மடையாமடையா கெட்டயிடையா (பெண்)
மாதர்கையடிப்பட்ட மார்க்கத்தைவிட்டு
மார்பிணிலணிந்தாயோ நீநல்லபட்டு
தாள்குள்ளசூரரால் மனமதுகெட்டு
சண்டிசண்டிவந்தபேயா நீயண்டி (பெண்)
காதுமுறமென்று சொன்னயேகண்டு
மாதுநீயென்பதை மறந்தாயோயன்று
யேதுமில்லாபன்றிநீ யல்லாவுலகத்தில்
ஏதடாயேதடாவோதடா எதிர்நின்று (பெண்)
பேட்டைமுனிசாமி பாட்டதைபாடி
நாட்டமாவந்தாயோ ஓட்டமாவோடி
வாட்டமுடன்கையை நீட்டாதேசாடி
போட்டிசெய்துவுன்னை வாட்டுவேன்வோடி (பெண்)

பரமசிவன் தரு.

வேண்டாமதுயென்மகனே விக்கினனேபூலா
ஆண்டவனேயென்றவரை ஆதரிப்பாய்சீலா

விக்கினமூர்த்தி தரு.

ஒருவனொருதீமைசெய்தால் உத்தமனேயய்யா
மருபடிமரப்பதுண்டோ மார்க்கமில்லாமெய்யா (ஒ)

பார்வதி தரு.

வாடும்படிசொன்னதெல்லாம் வார்த்தைக்கேழ்ப்பதுண்டு
தேடிவந்தபோததனை கேழ்க்கலாமோகண்டு

விநயகமூர்த்தி தரு.

சொன்னதெல்லாம்யோசித்தாலே இன்னம்வரும்கோபம்
அன்னையரேபார்க்கலாமோ நாமும்பரிதாபம்(சொ)

கிருஷ்ணன் தரு.

மாமன்மச்சான்முரைக்குசொன்னல் வர்மம்வைக்கலாமா
நேமமாகசலமடித்தால் நீர்விலகிபோமா (மா)

பரமசிவம் கவி.

உலகினில் கீர்த்திபெற்ற உத்தம மகனேகேளாய்
நலம்பெற யிருவருந்தான் நானிலந் தனைநடுங்க
வலுவுள்ள சூரன்தன்னை மாய்த்துமே வுலகம்மெச்ச
இலகிய யரைநொடிக்குள் யிக்ஷணம் வருகுவாயே.

விநயகமூர்த்தி ஓரடி தரு.

மாமேலமனமகிழ்ந்துநாமும் மல்லுக்குசெல்லுவோம்வாருமய்யா

கிருஷ்ணன் தரு.

ஆலகாலமுண்டருள்சீலனே அதிதுருசாகவாருமப்பா

விநயகமூர்த்தி தரு.

தந்திரம்வொன்றவுண்டதை சாற்றுவேன்விபரமாய்கேளுமையா

கிருஷ்ணன் தரு.

அந்தவிதங்களொன்னயிப்போ ஐங்கரனேநன்ருய்கூறுமப்பா

விநாயகமூர்த்தி தரு.

கோணங்கிபெருமாளாகவேயுமந்த கொடியயரக்கர்முன்வாருமையா

கிருஷ்ணன் தரு.

ஆடினாலென்னவுண்டதை அறிந்திடவேநன்றாய்கூறிடுவாய்

கோணங்கிபெருமாள் கவி.

ஆனைநல் முகவன்சொன்ன அருமொழி காதில்கேட்டு
கோணங்கி பெருமாளாக கொற்றவர் விஷ்ணுதானும்
வேணு நாதத்தைவிட்டு விளங்கிய பந்தமேந்தி
காணவே யரக்கர்முன்னே கண்ணனும் வருகின்றாரே.

கோணங்கிபெருமாள் தரு.

கோணங்கிபெருமாள்வந்தா ரைய்யா அந்த
கொடியஅரக்கர்முன் ரின்றாரைய்யா
காணவும்கிடைக்காத சரியமேநவர்ணன்
ஆனைதனைக்காத்த அய்யன்தத்தோமென்று (கோ)

கையில்பந்தங்கொளுத்தி கொண்டாரய்யா-அவர்
மெய்யில்துளபமாலை பூண்டாரய்யா
தையல்லக்ஷ்மிதன்னை பெருமைவிட்டு
வையமுண்டவர்வாயால் வைத்துப்பந்தத்தைதொட்டு (கோ)

பச்சைநிறமேனி துலங்கிடவே-வெகு
விச்சிதமாமணி குலுங்கிடவே
கச்சையிரிக்கிகட்டி கரிக்கிவுயர்கொடுத்தோர்
அச்சுதனென்றுமே அரக்கர்கண்டுநகைக்க (கோ)

மதுசூரான் கந்தார்த்தம்.

என்னடா மாயாநீதான் எதிர்த்துவந் தமர்கள்செய்து
உன்னாலே ஆகாமல்தான் ஓடிநீ ஒளித்துக்கொண்டாய்
பின்னாலே கைகால்கோணி பிலமது வெட்கிநாணி
தன்னாலே வந்த தென்ன.

மதுசூரான் தரு.

தட்டிகைகொட்டிநகைத்தான் அரக்கன்கண்டு
மட்டுமடா சினமிகுத்தான்

தட்டிநகைக்கும்போது எட்டிசக்கறம்வர
அப்படியில்லாவினயகர் அதனைபற்றியேகொள்ள (தட்)

விநாயகர் கவி.

கோபிகள் தன்னைகார்த்த கோபாலா கிருஷ்ணுவாருப்
ஆவலா யாக்கன்தன்னை அரைநொடி தன்னில்நீரும்
தாபித மாகநீரும் சக்கரத்தாலே கொல்லும்
நாவிந்த நந்தா யிங்கே நலமுடன் யெடுத்திட்டேனே.

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

சண்டைகள் செய்யவந்து சாமார்த்தியம் தன்னைப்பார்த்தேன்
எண்டிசை வுலகந்தன்னில் யெதிர்ப்பவர் வொருவர்யில்லை
கண்டுநான் அரிந்துக்கொண்டேன் கனத்தசந் தோஷமானேன்
இன்னெனன்ன வரங்கள் வேண்டுமென்று.

கிருஷ்ணன் தரு.

எடுத்துசொல்வீரேயெனக்கரிய விடுத்துவிள்ளுவீரே
கொடுத்தால்வரம்நல்ல குணமுண்டுங்களுக்கு
அடுத்தசேனையோடு யாவர்க்கும்தங்களோடு (எடு)

மதுசூரன் தரு.

வரங்கள்தரவும்வலுவுமுண்டோடா யடாகிஷ்டா
புறங்கொடுத்துநீ போனவனல்லவோ. (வர)

கிருஷ்ணன் தரு.

புரங்கொடுத்துபோனபோதிலும் அடாசூர
அரனூர்மைத்துனன் நானுமல்லவோ (புர)

மதுசூரன் தரு.

அரனூர்மைத்துனறென்றபோதிலும் அடடாகிருஷ்ணு
வரங்களென்னவேண்டும் சொல்லடா (அர)

கிருஷ்ணன் தரு.

தருவேனென்றபெரியசூரனே அதுவுண்மையானல்
தெரியசத்தியம் செய்துதருவீரே (தரு)

மதுசூரன் தரு.

சத்தியம்சத்தியம்தவருவதில்லை அடாகிருஷ்ணா
மெத்தவும்நீகேழ்ப்பாய் நல்லதோ (சத்)

கிருஷ்ணன் தரு.

அரியசத்தியம்செய்துதந்தியே அரக்கனேநீயும்
உரியசக்காத் திரையதாகவே (அரி)

மதுசூரன் தரு.

இரையதாகவென்றகேழ்க்கவே அடாகிருஷ்ணா
யெடுத்துகொடுத்தேன் வரங்கள்தன்னையே (இரை)

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

எடுத்திட்ட வரங்கள்தன்னை யின்பமாய்கொடுக்கும்போது
விடுத்துமே சக்கரத்தால் வீரிய சூரன்தன்னை
அடுத்திட மாயன்தானும் அதமது செய்வேனென்று
கடுத்துமே சக்கரத்தால்.

கிருஷ்ணன் தரு.

கண்ணனும்வெகுண்டுயெழுந்தார் அரக்கர்சேனை
திண்ணமாயெதிர்த்தி பொழிந்தார்
குண்ணியமனம்விடவும் கோபத்துடனெழுந்தார்
அண்ணலார்செபலோவென்று அரக்கர்சேனையொழிக்க (கண்)

பொது வசனம்.

இவ்விதமாக கண்ணபிரான் திகிரியாகிய சக்காத்தால் அரக்கன் வார்த்தைப்போல் மதுசூரன் முதல் அனேகஞ் சேனைகளை வாரி போரிட்டு பகவான் வைகுந்தம் சேர்ந்துவிட்டார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

மதுகயிடா சூரசம்மார நாடகம்.

முற்றிற்று.

உ

புதிய நாடக விளம்பரம்.

	ரூ.	அ.
வெங்கடேசபெருமாள் நாடகம்	0	5
குறவஞ்சி நாடகம்	0	5
பவழக்கொடி நாடகம்	0	5
அல்லி நாடகம்	0	5
புலந்திரன் களவு நாடகம்	0	5
மயிலிராவணன் சண்டை	0	5
கிருஷ்ணன் தூது நாடகம்	0	5
ஏணியேத்த நாடகம்	0	5
வாலிமோக்ஷ நாடகம்	0	5
அரவான் கடபலி நாடகம்	0	5
சுபத்திரைமாலை நாடகம்	0	5
தாடகை சம்மார நாடகம்	0	5
சாவித்திரி நாடகம்	0	5
மன்மத நாடகம்	0	5
முதல்நாள் சண்டை நாடகம்	0	5
துரோபதை மாலையீடு நாடகம்	0	5
திருநீலகண்ட நாடகம்	0	5
அரக்குமாளிகை நாடகம்	0	5
பீஷ்மர்சண்டை நாடகம்	0	5
ராமர்தெரிசன நாடகம்	0	5
ஸ்ரீராமர்பட்டாபிஷேக நாடகம்	0	5
இராஜசூயயாக நாடகம்	0	5
நளாயினி நாடகம்	0	5
காத்தவராய நாடகம்	0	5
காண்டாவனதகன நாடகம்	0	5
தமிழறியும்பெருமாள் நாடகம்	0	5
சூரசம்மார நாடகம்	0	5
சந்திரகலைகெர்வபங்க நாடகம்	0	5
சகஸ்திரகண்டராவண நாடகம்	0	5
பத்மாசூரசம்மார நாடகம்	0	5
கண்ணப்பநாயனர் நாடகம்	0	5

	ரூ.	அ.
அர்ச்சுனன் தபசுநாடகம்	0	5
விரிஞ்சீஸ்வரர் சதகம்	0	4
பலபேர்பாடியஒப்பாரி	0	3
சுந்தரிமாலையீடுநாடகம்	0	6
அபிமன்னன்சண்டைநாடகம்	0	6
சயிந்தவன் சண்டை நாடகம்	0	6
கர்ணமோக்ஷ நாடகம்	0	6
மாடுபிடிசண்டை நாடகம்	0	6
துளசிதாசர்நாடகம்	0	6
கோயில் நாடகம்	0	6
சராசந்தநாடகம்	0	6
ராவணசம்மார நாடகம்	0	6
சக்குபாய்சரித்திரம்	0	6
குசேலமாமுனிவர் சரித்திரம்	0	6
ஏகாதசி மகுத்துவ மென்னும் ருக்குமாங்கதன் சரித்திரம்	0	6
கிருஷ்ணவிலாசம்	0	6
சனிவாரவிரதநாடகம்	0	6
சீதா கல்லியாணம்	0	6
கீச்சகசம்மார நாடகம்	0	6

சோதிட புத்தகம்.

	ரூ.	அ.
புஜண்டர்நாடி	0	5
சோதிடஅரிச்சுவடி முதல்பாக	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4
வயித்திய அரிச்சுவடி	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4
சினேந்திரமாலை	1	0
வயித்தியதிறவுகோல் 12 பாகம் ஒரேகட்டம்	0	10
கந்தர்நாடி சோதிடம்	0	10

இப்படிக்கு,

சூளை-அம்மணி அம்மாள்,

நெ. 54. சாமிப்பிள்ளை வீதி சூளை மதராஸ்.